**நாமக்கல் வணிகவரி மாவட்ட துணை ஆணையர்(மாவ) அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திருமதி. சு.ஜெயா, M.C.A.,**

செ.மு.ந.க.1956/2022/அ1

நாள்: 16.06.2023

பொருள்: பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - நாமக்கல் வணிகவரி மாவட்டம் - 2021-22-க்கான தற்காலிக இளநிலை உதவியாளர் பதவி உயர்வு பட்டியல் வெளியிடப்பட்டது- பதிவறை எழுத்தர் பணிநிலையிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றது- பணியேற்பு ஆணை வழங்கியது - பணியில் சேர்ந்து கொண்டது - பணிவரன் முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1. இணை ஆணையர் (மா.வ.), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செ.மு.ந.க. 3406/2022/அ2, நாள்:07.06.2022 மற்றும் 28.06.2022.
3. இவ்வலுவலக செ.மு.ந.க.1956/2022/அ1, நாள்:30.06.2022.

*******

**ஆணை:**

1) பார்வை 1ல் காணும் இணை ஆணையர் (மா.வ.), சேலம் கோட்டம், சேலம் அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி பதிவறை எழுத்தர் பணிநிலையிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று இவ்வணிகவரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக 30.06.2022-ம் நாளிட்ட செயல்முறை ஆணைகளின் படி பணி நியமனம் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்து கொண்டுள்ள இளநிலை உதவியாளர்களுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு பணி வரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி (திருவா.) | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்து கொண்ட நாள் | பணிவரன் முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | சே.பூவிழி, ஆ1, இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர் (மாவ) அலுவலகம், ஓமலூர். | 01.07.2022 முற்பகல் | 01.07.2022 முற்பகல் |
| 2. | சா. ஆயிஷா, ஆ2, இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர் (மாவ) அலுவலகம், குமாரபாளையம். | 01.07.2022 பிற்பகல் | 01.07.2022 பிற்பகல் |
| 3. | அ.சாரதா, ஆ2, இளநிலை உதவியாளர் | மாநிலவரி அலுவலர் அலுவலகம், எடப்பாடி. | 01.07.2022 பிற்பகல் | 01.07.2022 பிற்பகல் |
| 4. | மா. லீலாவதி, ஆ2, இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர் (மாவ) அலுவலகம், சங்ககிரி. | 01.07.2022 பிற்பகல் | 01.07.2022 பிற்பகல் |

2) இப்பணியாளர்கள் தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினை பூர்த்தி செய்திடல் வேண்டும்.

3) இப்பணியாளர்கள் துறை தேர்வான மாவட்ட அலுவலக நடைமுறை நூலில் தேர்ச்சி பெறுவதுடன், அரசு அலுவலர் பயிற்சி மையம், பவானிசாகர் மூலம் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியினையும் நிறைவு செய்தல் வேண்டும்.

ஓம்/-சு.ஜெயா,
துணை ஆணையர்(மா.வ),
நாமக்கல்.

//உண்மை நகல்/உத்தரவுப்படி//

மாநிலவரி அலுவலர்/மேலாளர்

16/6/23

பெறுநர்:
உரிய பணியாளர்கள்.
(தலைமை அலுவலர் மூலமாக)

நகல்:
1) இணை ஆணையர்(மாவ), சேலம் கோட்டம், சேலம் அவர்களுக்குத் தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.
2) உதவி ஆணையர்கள்(மாவ), ஓமலூர், சங்ககிரி, குமாரபாளையம் மற்றும் மாநிலவரி அலுவலர், எடப்பாடி.
(பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டு)